## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 66/2019 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | தமிழ்செல்வன் | நாள் | 23.06.2022 |
| தகப்பனார் பெயர் | வரதராஜன் | | |

**1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–**

1) நான், பிரதிவாதிகள் என் அனுபவத்தில் உள்ள தாவா நிலத்திற்குள் வந்து எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என உறுத்துக்கட்டளை கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இறந்த 1ம் வாதியான என் தந்தை மட்டும்தான் ஒரே வாதியாக இருந்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால், சரிதான். என் தந்தை கடந்த 26.11.2020ம் தேதி இறந்துவிட்டார்.

2) குட்டப்பட்டி கிராமம் சர்வே எண்.362/2, சர்வே எண்.362/3 ஆகிய நிலங்களில் பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்ததால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

3) 1–ம் பிரதிவாதியான மாரியம்மாள் O.S.9/2013 என்ற பாகப்பிரிவினை வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, அதில் என் தந்தை 13–வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு வழக்கு விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால், சரிதான். மேற்படி வழக்கின் வழக்குரையை இவ்வழக்கில் வா.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரிதான்.

4) மேற்படி OS.9/2013 என்ற வழக்கில் சொத்துவிவரத்தில் சர்வே எண்.362/2, சர்வே எண்.362/3 ஆகிய சர்வே எண்களும் குறிப்பிடப்பட்டுள்ளன என்று சொன்னால், சரிதான்.

5) இவ்வழக்கு என் தந்தையால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், இவ்வழக்கில் விளம்புகை

பரிகாரம் எதுவும் கோரவில்லை என்று சொன்னாலும், தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதால் விளம்புகை பரிகாரம் எதுவும் கோரவில்லை.

6) வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் 1–ம் பிரதிவாதியின் தந்தை மாரிமுத்து கவுண்டரும், 1ம் பிரதிவாதியின் சகோதரர்கள் அங்கமுத்து, நாராயணசாமி, சின்னையன், விஸ்வநாதன் ஆகியோர்கள் மட்டும்தான் கையெழுத்திட்டுள்ளார்கள் என்றாலும், 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரிகளும் கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால், அதுகுறித்து எனக்கு தெரியாது. என் பிரமாண வாக்குமூலத்தில் நான் குறிப்பாக மாரிமுத்து கவுண்டரும், அங்கமுத்து, நாராயணசாமி, சின்னையன், விஸ்வநாதன் ஆகியோர்களும் தான் பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொடுத்திருக்கிறார்கள் என்று கூறியுள்ள நிலையில், அவ்வாறு எனக்கு தெரியாது என்று நான் சொல்வது பொய் என்றால், சரியல்ல.

7) வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் தாள் 2ல், சொத்துக்கள் அனைத்தும் மேற்படி பத்திரத்தின் தரப்பினர்கள் அனைவருக்கும், பிதுராஜியமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று கண்டுள்ளது என்று சொன்னால், சரிதான். 1ம் பிரதிவாதியின் தந்தை மாரிமுத்து கவுண்டருக்கு மொத்தம் 2 மனைவிகள் என்றால், இல்லை, 1–ம் பிரதிவாதியின் தாயார் உட்பட மொத்தம் 3 மனைவிகள் உள்ளனர்.

8) மாரிமுத்து கவுண்டரின் மேற்படி மனைவிகளுள் ஒருவர் பெயர் பெரிய பாப்பா மற்றொருவர் பெயர் சின்ன பாப்பா என்றால், சரிதான். மாரிமுத்து கவுண்டரின் முதல் மனைவி இறந்துவிட்டார். அவருடைய பெயர் எனக்கு தெரியாது. முதல் மனைவியின் வாரிசுகள் பற்றிய விவரம் எனக்கு தெரியாது.

9) அவ்வாறு மாரிமுத்து கவுண்டருக்கு முதல் மனைவி இருந்திருந்து அவருக்கு வாரிசுகள் இருந்திருந்தால், O.S.No.9/2013 என்ற வழக்கில் என் தந்தையால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரை வா.சா.ஆ.6 ல் என் தந்தை

அவர்களை பற்றிய சங்கதிகளை தெரிவித்திருப்பார் என்றாலும், நான் தற்போது இவ்வழக்கில் ஒரு புதிய சங்கதியை கூறுகிறேன் என்றாலும், சரியல்ல.

10) மாரிமுத்து கவுண்டருக்கு பெரிய பாப்பா என்ற மனைவி மூலமாக வைத்தியலிங்கம், அமராவதி, அய்யமுத்து, முத்தம்மாள் என்று 4 வாரிசுகள் உள்ளனர் என்றால், சரிதான். மாரிமுத்து கவுண்டரின் இளைய மனைவியான சின்ன பாப்பாவிற்கு சின்னையன், அங்கமுத்து, நாராயணசாமி, விஸ்வநாதன், கோகிலா, ஆராயி, மாரியம்மாள் ஆகிய வாரிசுகள் உள்ளனர் என்றால், சரிதான்.

11) மேற்படி மாரிமுத்து கவுண்டரின் இளைய மனைவி சின்ன பாப்பாவின் வாரிசுதான் 1-ம் பிரதிவாதி என்றால், சரிதான். வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்தில் மாரிமுத்து கவுண்டருக்கு மூத்ததாரத்து வகையில் மனைவி மற்றும் வாரிசுகளும், இளையதாரம் வகையில் மனைவி மற்றும் வாரிசுகளும் மட்டுமே உள்ளதாக கண்டுள்ளதாக என்றால், சரிதான்.

12) மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் மாரிமுத்து கவுண்டரின் மூத்ததாரம் மற்றும் இளையதாரர் மனைவிகளின் ஆண் வாரிசுகள் மட்டுமே தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றாலும், பெண் வாரிசுகள் எவரும் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்று சொன்னாலும், சரிதான்.

1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.